★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 28உ சனி (13—10—56) ★ ★ வெளியீடு: புரட்டாசி 29உ ஞாயிறு (14—10—56) [இதழ் 107

வடநாட்டில் மேலும் மூன்று சக்கரை ஆலைகள்!

★

புதுடில்லி, அக். 13—

பீகார், ஒரிசா, பஞ்சாப் மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சர்க்கரை ஆலை துவங்குவதற்கான திட்டங்களை சர்க்கார் அங்கீகரித்துள்ளதாம். இவற்றில் இரண்டு கூட்டுறவு முறையில் துவங்கப்படுமாம்.

ஆய்வுக்குழுவிடம் மக்கள் காட்டும் ஆர்வம்

கழகத் தோழர்கள் காட்டும் கடமை உணர்ச்சி

காஞ்சி, வேலூர் நகரில் ஆய்வுக் குழு வேலைகள்

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் 12-10-56 காலை சென்னையிலிருந்து காரில் புறப்பட்டு காஞ்சிக்கு 10-மணிக்கு வந்து சேர்ந்தனர்.

தேர்தல் ஆய்வுக் குழுவினரை எதிர்பார்த்து ஏராளமான பொதுமக்களும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கழகத் தோழர்களும் அனுதாபிகளும் ஆய்வுக்குழு தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த டிராவலர்ஸ் பங்களாவில் கூடியிருந்தனர்.

காலை 10-மணிக்கு வந்துசேர்ந்த தேர்தல் ஆய்வுக் குழுவினரை, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் சம்பந்தன், துணைச்செயலாளர் வகாப், நகரச் செயலாளர்வெங்கடேசன், மத்திய செயற்குழு உறுப்பினர் சி. வி எம். அண்ணாமலை, காஞ்சி-கல்யாணசுந்தரம், ஈழத்து அடிகள், ஆகியோர் வரவேற்றனர்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் பல்வேறு தொகுதிகளிலிருந்து ஏறத்தாழ 200-க்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், கழகத் தோழர்களும் வந்திருந்தனர்.

அத்தோழர்களிடையே பொதுச் செயலாளர், அவர்கள் ஆய்வுக் குழுவின் பணியையும், அதனை நிறைவேற்ற கழகத் தோழர்கள் தரவேண்டிய விளக்கங்களையும் எடுத்துக் கூறியதுடன், தேர்தல் நிதி சேர்ப்பதற்கான வேண்டுகோளையும் விடுத்தார்.

பின்னர், ஆய்வுக் குழுவினரான இரா. நெடுஞ்செழியன், சம்பத், நடராசன், மதியழகன் ஆகிய நால்வரும் தனி அறையில் வீற்றிருந்து, செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒவ்வொரு தொகுதியின் தேர்தல் சூழ்நிலையையும், கழகச் சார்பில் யார் யார் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்பதையும் வந்திருந்த பிரதிநிதிகளிடம் கேட்டு விவரம் தெரிந்தனர்.

ஒவ்வொரு தொகுதியைப் பற்றியும் ஒத்த கருத்துடையவர்கள் ஒரே சமயத்திலும், வேறுபாடு உடையவர்கள் தனித்தனியாகவும் தங்களின் கருத்துக்களை ஆய்வுக் குழுவின் முன் கூறினர். ஆய்வுக் குழு உறுப்பினர்கள், இந்த விவரங்களையும் மேலும் சில முக்கியக் கேள்விகளையும் கேட்டு அதற்கான விளக்கங்களைத் தெரிந்து, தனித்தனியே குறிப்பெடுத்துக்கொண்டனர். இவ்வாறு 150 பேர் தங்கள் எண்ணங்களைத் தேர்தல் குழுவினரிடம் தெரிவித்தனர்.

மாவட்டச் செயலாளரும், மற்றத் தோழர்களும் தொகுதிவாரியாகப் பிரதிநிதிகளை அழைத்து, நுழைவுச் சீட்டு கொடுத்து ஆய்வுக் குழுவினர் தங்கியிருந்த பிரத்தியேக இடத்திற்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆய்வுக் குழுவின் வேலை மாலை 4 மணிக்கு முடிந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஜப்பான் நகரில் பெரும் கிளர்ச்சி

அமெரிக்க விமானத் தளத்தை விரிவாக்குவதற்கு எதிர்ப்பு

டோக்கியோ, அக். 12—

அமெரிக்க விமானப் போர்த்தளம் ஒன்றினை விரிவுபடுத்தியதை எதிர்த்து டோக்கியோவை அடுத்த சுனகாவா நகரில் ஜப்பானியர் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

இந்தக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக 800 விசேடப் போலீசாரும், ஏராளமான இராணுவ மோட்டார்களும் நகரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

விமானத்தை விரிவு படுத்துவதற்காக நிலம் அளக்கச் சென்ற சர்க்கார் அதிகாரிகளுடன் உள்ளூர் சோஷலிஸ்டுகள் தலைமையில் அணிவகுத்திருந்த கூட்டம் மோதிக்கொண்டதாம். அந்த மோதலைப் பரப்பவிடாது தடுக்கச் சென்ற போலீசாரில் ஒருவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கலைந்து செல்லுமாறு விடுத்த உத்தரவையும் மீறி சுமார் 4,000 பேர் கூடி நின்றுகொண்டு கிளர்ச்சி செய்ததாகக் கூறப்படுகிறது.

இடமாற்றச் செய்தி கேட்ட ஊழியர்

மயக்கமடைந்து விழுந்தாராம்!

ஐதராபாத், அக். 12—

இங்குள்ள தலைமைக் கணக்காயர் அலுவலகத்தில் பணி புரியும் ஆந்திர குமாஸ்தா ஒருவர், தாம் இருமொழி பம்பாய் மாநிலத்தில் உள்ள நாகபுரிக்கு மாற்றப்பட்டிருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டதும் மயக்கம் போட்டு விழுந்தாராம்.

நெசவாளரைப் பயமுறுத்தும் எதிர்காலம்!

ஆந்திர எம். எல். ஏ. கோட்டையா எச்சரிக்கை

விசைத்தறித் திணிப்பு கைத்தறியாளரைத் தவிக்கவிடும்

சாதாரண அறிவுடையோரும் இதை அறிவரே

"ஆலைகளுக்கு வெளியே உள்ள விசைத் தறிகள், ஏற்கனவே கைத்தறித் தொழிலுக்கு பெருந் தீங்கு இழைத்துள்ளன. ஆலைகள், கைத்தறிகள் பிரச்சினைபற்றி ஆராய்ந்த குழு ஒன்று இதனை ஒப்பியிருக்கிறது. நாள் ஒன்றுக்கு 40 முதல் 60 கெசம் வரை நெய்யக்கூடிய ஒரு விசைத்தறி, ஏழு அல்லது எட்டு கைத்தறிகளை ஒழித்துவிடும். எனவே, 35,000 விசைத் தறிகள் புகுத்தப்பட்டால இலட்சக்கணக்கான நெசவாளர் வேலையின்றித் தவிக்க நேரிடும் என்பது சாதாரண அறிவு பெற்றவர்களாலும் உணரக் கூடியதாகும். அதனால்தான் கைத்தறியாளர், விசைத்தறி புகுத்தும் திட்டத்தை எதிர்க்கின்றனர்"

என்று, ஆந்திர கைத்தறியாளர் காங்கிரஸ் தலைவரான கோட்டையா எம்.எல் ஏ. தெரிவித்திருக்கிறார்.

அண்மையில், டி. டி. கே. சென்னையில் விசைத்தறி பற்றிப் பேசிய கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே கோட்டையா மேற்கண்டவாறு கருத்தறிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"தங்கள் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டுவிடுகிற நெசவாளரைப் பற்றி நாம் கவலைப்படவில்லை; மாறாக, அத்தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவோர் பற்றித்தான் கவலைப்படுகிறோம்.

"கைத்தறி நெசவாளருக்கு உண்மையிலேயே உதவ வேண்டும் என்று இந்திய சர்க்கார் விரும்பினால், அதற்குள்ள ஒரேவழி, சேலை, வேட்டி முதலியனவற்றைக் கைத்தறிகளுக்கே பிரத்தியேகமாக ஒதுக்குவதுதான். மேலும், கைத்தறிக்கான நூலும் எல்லாக் காலங்களிலும் தங்கு தடையின்றி நியாய விலையில் கிடைக்குமாறு செய்யவேண்டும்."

கே. வி. கே. சாமி கொலை வழக்கு

மேலும் ஒரு எதிரி சரண்

தூத்துக்குடி, அக். 11—

கே. வி. கே. சாமி படுகொலைக்குக் காரணமானவர்கள் என்று போலீசாரல் தேடப்பட்டு வந்தவர்களில் ஜெகன்னாதன் என்பவர், நாங்குனேரி சப்-மாஜிஸ்திரேட் முன்னிலையில் சரணடைந்துள்ளதாகவும், அவர் தூத்துக்குடிக்குக் கொண்டுவரப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இன்னும் பாண்டியன் என்ற ஒரு நபர் மட்டுமே பிடிபடவேண்டியுள்ளார் என்றும் போலீசார் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

★

ஆறுமுகம் கொலை வழக்கு

கிராம முன்சீப் ஆறுமுகம் கொலை சம்பந்தமான புலன் விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது என்றும், சீக்கிரமே குற்றப் பத்திரிகை தாக்கலாகும் என்றும், சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் டி. எஸ். செல்லையா பிள்ளை கூறியிருக்கிறார் என்று தெரியவருகிறது.

சமரச முடிவுக்கான முயற்சி தோல்வி?

சூயஸ் சிக்கலில் அடுத்த கட்டம் என்ன?

நியூயார்க், அக். 13—

சூயஸ் தகராறுக்கு ஒரு சுமூக முடிவு காணவேண்டும் என்பதற்காகப் பிரிட்டன்—பிரான்ஸ்—எகிப்து ஆகிய நாடுகளின் வெளி விவகார மந்திரிகள் கடந்த ஒரு வாரகாலமாக நடத்தி வந்த பேச்சுவார்த்தைகளில் தோல்விமுகம்தான் தலைகாட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்றுவரை பேச்சுவார்த்தை நம்பிக்கையூட்டுவனவாயிருப்பதாக அறிவிக்கப்பட்டுவந்தது; இன்று, 'அவை தோல்வியடைவது நிச்சயம்' என்று கூறப்படுகிறது.

"பேச்சுக்களில் முன்னேற்றம் எதும் இல்லை; தொடர்ந்து நடத்த எந்தவித அடிப்படையும் தெரியவில்லை,"

என்று, பிரெஞ்சு மந்திரி பினே தெரிவித்திருக்கிறார்.

"பேச்சுவார்த்தைகள் முழுவதுமாகத் தோல்வியுற்றால், நாங்கள் கூட்டாக ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தாக்கல் செய்துள்ள தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்துமாறு வற்புறுத்துவோம்,"

என்று, பிரிட்டிஷ் மந்திரி லாயிட் கூறியிருக்கிறார்.

அந்தத் தீர்மானம், லண்டன் மாநாட்டில் 18 நாடுகள் தயாரித்த சூயஸ் கால்வாயை சர்வதேசமயமாக்குவது என்ற திட்டம் குறித்து, எகிப்து, மேற்கு வல்லரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென சிபாரிசு செய்யுமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கோருகிறது.

அடக்குமுறை வெறி உச்சம் பெறுகிறது

அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க விமானத்திலிருந்து குண்டுமாரி

அல்ஜியர்ஸ், அக். 12—

அல்ஜீரியாவில், விடுதலை கோரி கிளர்ந்தெழுந்துள்ள தீவிர தேசியவாதிகளை பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள், தங்களின் இராணுவ பலம் முழுவதையும் கொண்டு வேட்டையாடி வரும் கொடுஞ்செயல் நீடித்துக் கொண்டே இருக்கிறது.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் பிரெஞ்சு இராணுவத்தினர், விமானங்கள் மூலம் குண்டுமாரி பொழிந்து சுமார் 80 பேர்களின் உயிரைக் குடித்ததாக அவர்களே பெருமை எனக் கருதி அறிவித்திருக்கிறார்கள்.

விமானங்கள், டாங்கிகள், யுத்தக் கப்பல்கள் எல்லாம் தீவிரவாதிகளைப் பூண்டோடு அழிப்பதற்கு முனைந்திருக்கின்றனவாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை • 13-10-'56 சனி

அபாய நிலைமை!

உடை—உறையுள்—உணவு இம்மூன்றும் வில்லங்கம் ஏதும் இன்றி மக்களுக்குக் கிடைத்தால்தான் அவர்கள், விலங்கினங்களிலிருந்து வேறுபட்டதோர் மனித வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள் என்று கொள்ள முடியும். இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவவேண்டுவது எந்த ஒரு சர்க்காருடையவும் தலையாய கடமையாகும். அல்ல—சர்க்கார்கள் அமைவதற்கே, இவைகளை மக்களுக்குப் பெற்றுத்தர வல்லதோர் அமைப்பு வேண்டும் என்ற தேவைதான் பிரதான அடிப்படையாக அமைகிறது என்றாலும், அது மிகையாகாது.

ஆனால், எவர் பெயரால் தாங்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கிறார்களோ அந்த மக்களுக்கு, அவர்களது அடிப்படைத் தேவைகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற கவலையே அற்றவர்களாகக் காங்கிரஸ் ஆட்சியாளர் இருந்து வருவதைக் காண்கிறோம். தாங்கள் எதற்காக ஆட்சியிலமர்ந்திருக்கிறோம் என்ற அரிச்சுவடியே அறியாதவர்களாயிருப்பதில் அவர்களுக்குக் கிஞ்சிற்றும் வெட்கமிருப்பதாயும் தெரியவில்லை. பெயர் மட்டும் என்னவோ 'மக்கள் சர்க்கார்—சனநாயக சர்க்கார்' என்றெல்லாம் சூட்டிக் கொள்கிறார்கள்.

இந்த 'மக்கள் சர்க்கார்' பதவிக்கு வந்து ஒன்பதாண்டுகளுக்கு மேலாகியும், மக்களின் அடிப்படைத் தேவைகளில் எதுவும் பூர்த்தி செய்யப்படவில்லை. இந்த உண்மை அவர்களைத் தலைகுனிய வைக்கும் ஆற்றலைப் பெறாதுபோனதுதான் ஆச்சரியம்!

உணவு?—போதிய அளவு மக்களுக்குக் கிடைக்கவில்லை! உடை?—ஒரு சேலையின் முந்தானையை உடுத்திக்கொண்டு மறு தலைப்பை உலர்த்துகிற காட்சி, நாட்டில் நீடிக்கிறது. உறையுள்?—வீதிகளில் தூங்குவோர் எண்ணிக்கை பெருகி வருகிறது.

இந்தக் காட்சிகள், காங்கிரசாரின் 'மக்கள்சர்க்காரு'க்குப் பொருள் கூறுவனவாயில்லையா? ஆண்டுகள் என்னவோ, ஒன்பது உருண்டோடிவிட்டன!

தேவையான அளவு உணவு பெற மக்களுக்கு வருமானம் இல்லை. அரைவயிறு கால் வயிறு உண்ணக்கூட வாய்ப்பின்றி மக்களில் பலர் வேலையின்றித் தவிக்கின்றனர். இந்த நிலையே கொடுமையானது. இந்தக் கொடுமையின் 'தர'த்தை மிகுவிக்கத்தான் காங்கிரசாட்சியினால் கடந்த ஒன்பதாண்டுகளில் முடிந்திருக்கிறது.

அரைவயிறு உண்டோர் கால் வயிறு உண்ணவும், கால் வயிறு உண்டோர் வயிறு காயவும் ஆன நிலைமை, உணவுப் பண்டங்களின் விலைவாசி ஏற்றம் உண்டாக்கியிருக்கிறது.

கடந்த எட்டுத் திங்களுக்கு முன்பிருந்த விலையைப்போல், எல்லா அத்தியாவசியப் பண்டங்களின் விலையும் ஏறத்தாழ இரு மடங்கு உயர்ந்துள்ளன. இந்த விலை ஏற்றத்தைத் தடுத்து, மக்களுக்கு நியாயமான விலைக்குப் போதுமான உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்ய வேண்டிய மகத்தான பொறுப்பிலிருந்து இந்த மாநில சர்க்கார் மட்டுமின்றி, இவர்களை இயக்குவிக்கும் 'சூத்திரதாரி'களான டில்லி சர்க்காரும், முழுவதும் வழுவிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டுகிறோம்.

'விலைகள் ஏறிவருவதை நாங்கள் கூர்ந்து கவனித்து வருகிறோம்' என்று சில காலமும், 'விலை ஏற்றத்திற்கான காரணங்களை ஆராய்ந்துகொண்டிருக்கிறோம்' என்று சில காலமும், 'காரணங்களைக் கண்டுபிடித்துவிட்டோம்; ஆனால் எந்தவித நடவடிக்கைகள் மேற்கொள்ளுவது என்பதுபற்றி யோசித்து வருகிறோம்' என்று சில காலமும், 'பதுக்கல் பேர்வழிகள்தான் விலை ஏற்றத்திற்கு மூலகாரணமானவர்கள்; அவர்களை எச்சரிக்கிறோம்' என்று கூறுவதில் சிலகாலமும் செலவழித்துக்கொண்டு, வீண் கால விரயம் செய்வதன்றி, விலை ஏற்றத்தைத் தடுத்து, பயங்கரமான நெருக்கடியிலிருந்து மக்களை மீட்கவேண்டுமே என்ற கவலையோடு எந்த ஒரு உருப்படியான நடவடிக்கையையும் டில்லி சர்க்காரோ, சென்னை சர்க்காரோ மேற்கொள்ளக் காணோம்.

'ஏராளமான உணவுப் பொருளை இறக்குமதி செய்யப் போகிறோம்; தாராளமான விநியோகத்திற்கு வழி செய்யப் போகிறோம்' என்று வாய்ப்பந்தல் போடுகிறார்கள் மந்திரிகள். மக்களது நிலையோ, அபாய எல்லையையும் மீறிக் கொண்டிருக்கிறது.

உணவுப் பண்டங்களின் விலை ஏற்றத்திற்குப் பெரும் வியாபாரிகளுடையவும், நிலப்பிரபுக்களுடையவும் கொள்ளை இலாப நோக்கின் விளைவான பதுக்கல்தான் முக்கியக் காரணம் என்பதை மறுக்காமலிருக்கும் மந்திரிகள், அந்தப் பதுக்கல் பேர்வழிகளை மக்கள் மன்றத்தின் முன் வெளிச்சம் போட்டுக்காட்டத் தயங்குவது ஏன்? நாடியைப் பார்த்து நோயையும் கூறிவிட்டு, நோய் அகல மருந்து தர மறுப்பது எதனால்?

'இரண்டரை இலட்சம் டன் அரிசி கிடைத்தால் எங்கள் தேவை சரியாகிவிடும்' என்று, நிலைமையையே முற்றிலும் திரித்துக் கூறுகிற பேர்வழிகள் மந்திரிகளாக இருக்கின்றனர், இந்த மாநிலத்தில்! ஆண்டு ஒன்றுக்கு இரண்டரை இலட்சம் டன் அரிசி பற்றாக்குறை இருப்பதினால்தான், இந்த மாநிலத்தில் விலை ஏற்றம் கடுமையாயிருக்கிறது என்று கூறுவதைவிடப் பேதமையான கூற்று எதுவும் இருக்க முடியாது.

உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பதில் காங்கிரசாட்சி பெற்றுள்ள முழுத் தோல்வியை உணர்த்துகிற இந்த விலை ஏற்றம் வெகுசீக்கிரத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு நியாயமான விலையில் உணவுப் பண்டங்கள் கிடைக்கக் காங்கிரசார் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், 'எதிர்காலத்திலும் தொடர்ந்து பதவியிலிருக்க வேண்டும்' என்ற அவர்களது கனவு, பலிக்காது என்று எச்சரிக்கிறோம்.

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்:

'பேராசையானது; பணவீக்கத்தை உண்டாக்கும் அபாயமுடையது'

திட்டத்தின் பலவீனமான அம்சங்கள் குறித்து உலக பாங்கி கருத்து

வாஷிங்டன், அக். 10—

மிகப் பிரமாதமாக விளம்பரப்படுத்தப்படும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம், மிகுந்த பேராசையின் விளைவு என்றும், பணவீக்கத்தை உண்டுபண்ணக்கூடியது என்றும் உலக பாங்கி கருத்தறிவித்திருப்பதுடன், திட்டத்தின் பலவீனமான அம்சங்களையும் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரியவருகிறது

உலக பாங்கி, திட்ட நிறைவேற்றத்திற்காக இந்திய சர்க்காருக்குக் கடன் வழங்குவது பற்றி இரு சாராரும் கூடிப்பேசி வருகின்றனர்.

உதவியளிப்பது குறித்து மந்திரி டி. டி கிருஷ்ணமாச்சாரிக்கு உலக பாங்கி தலைவரான ஈ. பிளாக் என்பார், கடந்த மாதம் எழுதிய கடிதம் பிரசுரிக்கப்படவில்லை.

ஆனாலும், 'உலக பாங்கிற்கும் இந்தியாவிற்கும் உள்ள உறவை முறிக்கக்கூடிய வகையில் தகராறு எதும் எழுப்பப்படவில்லை' என்று பாங்கி அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருப்பது, பாங்கி, டில்லி திட்டத்திற்குக் கணிசமான அளவு உதவும் என்ற நம்பிக்கையைத் தளர்த்தியிருக்கிறது என்றே கூறப்படுகிறது.

இந்திய சர்க்காரின் நிதி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தலைமையில், உதவி பெறுவதற்காக இப்போது உலக பாங்கியிடம் தூதுக்குழு ஒன்று சென்றுள்ளது

வடக்கிலுள்ள மின்சார உற்பத்தி நிலையம்

ரூ. 6 கோடி செலவில் மேலும் விரிவுபடுத்தப்படும்

பம்பாய், ஆக. 11—

டிராம்பேயில் உள்ள டாடா மின்சார உற்பத்தி நிலையம், மேலும் 50,000 கிலோவாட் மின்சார உற்பத்தி செய்யக்கூடிய வகையில் விரிவுபடுத்தப்படவிருக்கிறதாம்.

இதற்காக ரூ 6 கோடி செலவிடப்படுமாம்.

இதனால், மொத்தம்ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் கிலோவாட் மின்சாரம் அங்கு உற்பத்தியாகுமாம்.

தூத்துக்குடியில் படகு கட்டும் தளமாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தூத்துக்குடியில் படகு கட்டும் தளம் ஒன்று நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீன் வளர்ப்புத் துறை முன்னேற்றத்துக்காக போடப்பட்டுள்ள உத்தேசத் திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்தத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் தோணிகளுக்கும், படகுகளுக்கும் மானியம் கொடுத்து, அவைகள் மீன் பிடிப்பவர்களுக்கு மலிவாக விற்கப்படும்.

மீன் வளர்ப்புப் பண்ணை

மேலும் விரிவாக்க முடிவு

சென்னை, அக். 11—

பவானிசாகரிலும் மலம்புழாவிலும், சிறிய அளவில் மங்கலத்திலும் மீன் வளர்ப்புப் பண்ணைகளை மேலும் விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் ஆகஸ்டுவரை ஒரு இலட்சம் மீன் குஞ்சுகள் வளர்த்துவைக்கப்பட்டிருக்கிறதாம். மீன் பராமரிப்பு நிலையங்கள் மேட்டூர் அணையிலும், தூத்துக்குடியிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாம். மீன் பிடிப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கு தவணைக் கடன் வசதியுடன் தருவதற்காக 5 மோட்டார் வண்டிகளை வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

சட்டசபையை அவமதித்ததாக!

டில்லி பத்திரிகைமீது குற்றச் சாட்டு

புதுடில்லி, அக். 11—

புதுடில்லி சட்டசபையை அவமதிக்கும் வகையில் தலையங்கம் எழுதியதாக, 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற இதழ்மீது குற்றம் சாட்டப்பட்டு, அப்பத்திரிகை எச்சரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

சட்டசபையின் கடந்த கூட்டத்தில் ஐந்து உறுப்பினர்கள் உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, சபையில் உறுப்பினர்கள் தங்கள் கருத்தைச் சுதந்திரமாக எடுத்துரைப்பதற்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் தலையங்கம் எழுதப்பட்டிருப்பதாகவும், இது உறுப்பினர் தம் உரிமையைப் பறிப்பதுடன் சபையையும் அவமதிப்பதாகும் என்றும் எடுத்துரைத்தனர். அதன்பேரில், பத்திரிகையின் விளக்கம் கோரப்பட்டது.

பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் தந்த விளக்கம் திருப்திகரமானதாக இல்லை என்பது காணப்பட்டு, இந்த எச்சரிக்கை தரப்பட்டிருக்கிறதாம்

பலகோடி ரூபாய் செலவில் உருவான பக்ரா அணை!

எதிர்பார்த்த பலனைத் தராதாம்!

புதுடில்லி, அக். 13—

எதிர்பார்த்த அளவுக்கு நீர்ப்பாசன வசதியைக் கட்டி முடிக்கப்பட்டுள்ள பக்ரா அணை தராது என்பது இப்போது தெளிவாக்கப்பட்டுள்ளதாம்.

டில்லி பொருளாதாரப் பள்ளியைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் கே என். ராஜ் என்பார் தந்த அறிக்கையின் பேரில், பக்ராவின் உபயோகம் குறித்து இப்போது மீண்டும் பரிசீலனை நடைபெறுகிறது!

திட்டம் பற்றி சர்க்கார் விடுத்த அறிக்கை, 'அணையில் தேக்கப்படும் தண்ணீர் 30 இலட்சம் ஏகர் பாசனத்திற்கு உதவும்' என்று பெருமையோடு கூறிற்று!

ஆனால் இப்போது, அணை அந்த அளவு பலன் தராது என்று கூறப்படுகிறது

இனி, மேலும் பல கோடி ரூபாய் செலவில் சில துணைத் திட்டங்களை உருவாக்கினாலன்றி, பக்ரா அணை எதிர்பார்த்த அளவு பலனைத்தராது என்பது உறுதியாகிவிட்டதாம்!

தனிப்பட்டவர் பள்ளிகளுக்கு...!

சர்க்காரின் நிதி உதவி தொடர்ந்து கிடைக்கும்

கர்னூல், அக். 9—

தர்மிச்சையாகத்தோன்றி, சிறிய பணிபுரியும் கல்வி நிலையங்களில் சர்க்காரினால் அங்கீகரிக்கப்பட்டவைக்கு, இரண்டாம் திட்ட காலத்திலும் தொடர்ந்து நிதி உதவி அளிப்பதென சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

புதிய திட்டத்தில், சமூக, ஆதார, இடைநிலைக் கல்வி நிலையங்களும் அடங்குமாம்.

உதவி பெறத் தகுதியான பள்ளிகள், நிதி உதவி கோரி மனுச் செய்யுமாறு கேட்கப்பட்டிருக்கின்றனவாம்.

அரசியல், நிர்வாக 'டிப்ளோமா' பயிற்சி

சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தக்கூடும்?

மதுரை, அக் 11—

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களுக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் ஓர் வரவேற்பளித்த போது, சங்கத் தலைவர் பி. டி. இராசன் அவர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தரின் திறமைகளைப் புகழ்ந்தும், அவரது மேடைப் பிரசங்கத் திறமையைப் பாராட்டியும் பேசி, மேடைப் பிரசங்கத்திற்கு ஒரு 'டிப்ளோமா' பயிற்சியை சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

வரவேற்புக்குப் பதிலளிக்கையில் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள், தற்சமயம் நிறைய 'டிப்ளோமா'க்கள் இருப்பதாக ஏற்கனவே புகார் இருப்பதாகவும், ஆனால் விரைவில் அரசியல் பொது நிர்வாகத்திற்கு ஒரு 'டிப்ளோமா' பயிற்சி சென்னை பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்படும் என்றும், மேடைப் பிரசங்கம் நிச்சயம் அதில் சேர்ந்திருக்கும் என்றும் கூறினார்.

மூன்றுவிதச் சிக்கல் பற்றி டி. டி. கே.

சென்னை, அக் 11—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இதற்குள்ளாகவே சிக்கல்களையும் கஷ்டங்களையும் கண்டுபிடிக்க ஆரம்பித்துவிட்டார், இந்திய அரசாங்க நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி.

உள்நாட்டில் நிதி, மற்றும் இதர வசதிகளைப் போதுமான அளவு திரட்டுவது முதலாவது சிக்கலாம்!

வெளிநாட்டுச் செலாவணியில் பற்றாக்குறை ஏற்பட்டுவருவது இரண்டாவது சிக்கலாக அமைந்துள்ளதாம்.

தற்போதையச் சூழ்நிலையில் விலைக் கொள்கை ஒன்றை நிலைநாட்ட முடியாத நிலை ஏற்பட்டிருப்பது மூன்றாவது சிக்கலாம்!

நெய்வேலி திட்டத்தை

நிறைவேற்ற சர்க்கார் கம்பெனி

புதுடில்லி, அக் 11—

நெய்வேலித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்தியக் கம்பெனிகள் சட்டப்படி, வரும் நவம்பர் முதல் வாரத்தில் சர்க்கார் கம்பெனி ஒன்று நிறுவப்படும் என்று தெரியவருகிறது.

அபிவிருத்தி திட்டங்களில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டதேன்?

வடக்கே கோடிக்கணக்கான நூற்புக் கதிர்கள் – தெற்கே அம்பர் சர்க்கா திணிப்பா?

தொழிலதிபர் கருமுத்து சுந்தரம் கேள்வி

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் போதிய அளவு தொகை பெறவில்லை; காரணம், இம்மாநில ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ளவர்கள் அது குறித்துத் தக்கக் கவனம் செலுத்தாததுதான்.

"தென்னகத்தில் இன்னும் அதிகமான தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும். பம்பாய் மாநிலத்தில் மட்டும் ஒன்றரை கோடி நூற்புக் கதிர்கள் உள்ளன; இது, நாட்டின் மொத்தத் தேவையில் 60 சத விகிதமாகும் இவ்வாறு வடக்கில் தொழில்கள் வளர்ந்துள்ள நேரத்தில், பழைமையான முறைகளான அம்பர் சர்க்காவைத் தென்னகத்தில் புகுத்துகிறார்கள். இதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயராது

"தென்னாடு தொழில் வளர்ச்சியில் உரிய இடம் பெற அடிக்கடி நாம் குரல் எழுப்பிக் கொண்டிருக்க வேண்டும்,"

என்று, தொழிலதிபர் திரு. கருமுத்து சுந்தரம் அவர்கள் விருதுநகர் செந்திகுமார நாடார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"சுதந்திரத்தின் முழுப் பயனை எல்லா மக்களும் அடைய வேண்டுமானால், எல்லா அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது; எல்லா அதிகாரங்களும் மத்திய ஆட்சியிடம் இருப்பதால் தான் சில பகுதிகள் தொழில் துறையில் புறக்கணிக்கப்படுகிறது

"சுதந்திரப் போராட்டக் காலத்தில் மொழிவழி மாநிலம் அமைக்கப்படும் என்று கூறிய காங்கிரஸ் தலைவர்கள், தாங்கள் அதிகாரத்திற்கு வந்தவுடன், இரண்டு மூன்று மொழி பேசும் மக்களை ஒன்றாக இணைத்துத் தனி மாநிலம் அமைப்பதன் மூலம் வெள்ளையர்கள் கடைப்பிடித்து வந்த பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைப்பிடிக்கின்றனர்.

"ஒரு நாட்டிலுள்ள மக்கள் பேசும் மொழியிலேயே ஆட்சி நடைபெறவேண்டும்; அப்பொழுது தான் எல்லா மக்களும் ஆட்சியில் பங்குகொள்ள முடியும். இப்பொழுது ஆட்சி மொழியாக உள்ள ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டு, இந்தி மொழி ஆட்சிக்கு வந்துவிட்டால், தமிழர்கள் ஆட்சியில் பங்கு கொள்ளவே இயலாது."

சிறைக் கைதிகளைச் சீர்திருத்த ஏற்பாடு

சமுதாயத்திற்குப் பயன்படக் கூடியவர்களாக ஆக்கப்படுவர்

சிறைச்சாலைகளுக்குள் கைதிகள் வேலை செய்து சம்பாதிக்கக்கூடிய ஒரு திட்டத்தை டில்லி சிறையில் பந்த் தொடங்கிவைத்தார்.

இந்தத் திட்டத்தின்கீழ், கம்பள நெசவு, துணி நெசவு, தச்சு வேலை, சோப்பு தயாரித்தல், அம்பர் சர்க்காவில் நூல் நூற்றல் போன்ற தொழில்களில் சிறைக் கைதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது

"சிறைகளில் கைதிகளின் தொல்லைகளைக் குறைத்து, அவர்களைச் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடியவர்களாக ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் விரைவில் எடுக்கும்" என்று, அப்போது பந்த் கூறியுள்ளார்.

அதிசயம்தான்!

உடுமலைப்பேட்டை, அக். 11—

இந்நகரில் உள்ள 19 அறைகள் கொண்ட சிறையில் கடந்த நான்கு நாட்களாகக் கைதிகளே இல்லாத நிகழ்ச்சி முதல் தடவையாக நடைபெற்றுள்ளது.

சிறைக்கு அனுப்பாமல் சீர்திருத்த வேண்டுமாம்!

கோவை, அக். 10—

"திருடர்களைச் சிறைக்கு அனுப்பாதீர்கள்; அவர்களுக்கு ஆளுக்கு 2 ஏக்கர் நிலம் கொடுத்து, அதில் வேலை செய்யச் சொல்லுங்கள்" என்று விநோபா பாவே, கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மனந் திருந்தினர்— மார்க்கம் கண்டனர்!

சென்னை, அக். 12—

சென்னை போக்குவரவு இலாகாவை நிரந்தரமானதாக்க அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அமைச்சர் பரமேசுவரன் கூறியுள்ளார்.

குறிப்பிட்ட சில ஆண்டுகளாக வேலை செய்தவரும் எல்லா ஊழியர்களின் வேலையும் நிரந்தரமாக்கப்படும் என்றும், அதற்கான உத்திரவு விரைவில் பிறப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம், ஊழியர்கள் அனைவரும் பென்ஷன், மற்ற வசதிகள் அனைத்தும் கிடைக்கப்பெறுவர்.

வருமான அம்சத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கம் நடத்தும் பஸ் போக்குவரத்து வெற்றிகரமாகவே இருக்கிறதாம்

ஐதராபாத் பகுதிகளில் கடும் உணவுப் பஞ்சம்

வெட்கமின்றி ஒப்புகிறார் மந்திரி

ஐதராபாத், அக். 10—

மாநிலத்தின் மராத்வாடா, கர்நாடகப் பகுதிகளில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாக சட்டசபையில் விவசாய மந்திரி எம் சென்ன ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பகுதிகள் இடைக் காலத்தில், சிறிது நிவாரணம் பெற்றிருந்து, இப்போது மீண்டும் பஞ்சத்தால் தாக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

நஷ்ட ஈடு வழங்க கமிஷனர் நியமனம்

ஐதராபாத், அக். 11—

அண்மையில் மெகபூப் நகர் அருகே நடைபெற்ற இரயில் விபத்தில் 122 பேர்வரை கொல்லப்பட்டது நினைவிலிருக்கலாம்.

இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக, நகர பிரதம நீதிபதி பி. சுதே என்பார் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது.

ஆகாயத்திலேயே அணுகுண்டு சோதனை

மெல்போர்ன், அக். 11—

இன்று பிற்பகல் மாலிங்கா பாலைவன சோதனைக் களத்தில் பிரிட்டிஷ் அணுகுண்டு ஒன்று ஆகாயத்திலேயே வெடித்துப் பரிசோதனை செய்யப்பட்டதாம்.

பிரிட்டன் செய்துவரும் பரிசோதனைகளில் இது மூன்றாவதாகும். முன்பு வெடிக்கப்பட்ட இரு குண்டுகளைக் காட்டிலும் இந்த குண்டு குறைந்த சக்தியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

முன்னேற்றம் அடையவில்லையாம்!

கார்நிகிராமம், அக். 11—

"இந்தியாவில் ஆதாரக் கல்வி அதிக முன்னேற்றம் அடையவில்லை; ஆசிரியர்களும், பொது மக்களும் பழைய கல்வி முறையிலிருந்து புதிய கல்வி முறைக்கு மாறத் தயங்குவதே ஆதாரக் கல்வி முன்னேற்றமடையாததற்கு அடிப்படைக் காரணமாகும்,"

என்று, காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஸ்ரீமந்நாராயணன் அடிப்படைக் கல்வி ஆசிரியர்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ 2 கோடி சமூகநலத் திட்டத்திற்கும், கிராமக் குடிசைத் தொழிலுக்காக ரூ 2 கோடியும் செலவிடப்படும் என்று தெரிவித்தார்.

ஆதாரக் கல்வி புறக்கணிக்கப்படுகிறதாம்!

கார்நிகிராமம், அக். 11—

"மோசமான நிர்வாகத்தினால் தான் ஆதாரக் கல்வி புறக்கணிக்கப்படுகிறது; நல்ல நிர்வாகம் இருக்குமேயானால் சிறந்த முறையில் ஆதாரக் கல்வியைப் போதிக்க முடியும்,"

என்று, காந்தி கிராம நிர்வாகி, ஆதாரக்கல்வி ஆசிரியர்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், 'அரசாங்கம் சரிவர ஆதாரக் கல்விக்கு உதவியளிக்கவில்லை' என்று கண்டித்தார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு கூட்டுறவுப் பண்ணை

பரீட்சார்த்த முறையில் துவங்கப்படுமாம்

சென்னை, அக். 11—

கூட்டுறவு முறையில் பண்ணை நடத்துவதற்கான பரீட்சார்த்தத் திட்டம் ஒன்றை, மாநில சர்க்கார், 100 ஏகர் நிலப்பரப்பில், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள சிவகிரி கிராமத்தில் துவக்குவர் என்று தெரிய வருகிறது.

இதற்காக இப்போதுதான் கிராமத்தில் ஒரு கூட்டுறவு சங்கம் துவக்கப்பட்டிருக்கிறது என்றும், நெல், மிளகாய் முதலியனவற்றை சங்கத்தின் உறுப்பினராயுள்ளோர், செலவுகளை ஏற்றுக்கொண்டு கூட்டாகப் பயிரிடுவர் என்றும் தெரிய வருகிறது

சங்கத்தின் முதலீட்டுச் செலவுக்காக சுமார் 20 பேர் தலா. ரூ. 500 வரையில் தந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

சுமார் 100 ஏகர் நிலம் வரை சங்கத்தினால் கூட்டுறவுப் பண்ணைக்காகப் பயன்படுத்தப்படுமாம்.

சர்க்கார் வழக்கம்போல சங்கத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்யுமாம்.

இதற்கு என்ன காரணமோ?

ஆலைத்துணி உற்பத்திப் பெருக்குக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, ஆலைகள் உற்பத்திச்செய்யும் அதிகத் துணிக்கு மட்டும் கெசத்திற்கு அரையணா வீதம் 'எக்சைஸ்' வரியில் தள்ளுபடி அளிப்பதென மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

1956 ஜனவரியிலிருந்து ஆகஸ்ட் மாதம்வரை உற்பத்தி செய்யப்பட்ட துணியின் மாத சராசரி உற்பத்தியைக் கணக்கிட்டு தள்ளுபடி கொடுக்கப்படுமாம்.

இந்த அதிகரிப்புக்கு என்ன காரணமோ?

கர்னூல், அக். 11—

1954-ம் ஆண்டில் வால்டேர் பைத்தியக்கார மருத்துவ விடுதியில் 339 பைத்தியக்காரர்கள் இருந்தனராம்; அதற்கு முந்தின ஆண்டு 348 பேர் இருந்தனராம்.

1954-ம் ஆண்டில் பைத்தியக்காரிகள் 89 பேர் இருந்தனராம்; அதற்கு முன் ஆண்டில் 84 பேர் தான் இருந்தனராம்!

3,875 கிராமங்களில் மின்சார வசதியாம்!

7,779 மின்சார நீர் இறைப்பு சாதனம் அமைக்கப்பட்டுள்ளதாம்

சென்னை, அக் 11—

சென்னை மாநிலத்தில் இதுவரை 3,875 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தரப்பட்டிருக்கிறதாம்! மொத்தம் 7,779 மின்சார நீர் இறைப்புச் சாதனங்களும் (பம்புகள்) அமைக்கப்பட்டிருக்கின்றனவாம்!

கடந்த ஆறு மாத காலத்தில் 554 கிராமங்களுக்கு மின்சார வசதியும், 5,339 பம்பு செட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கடைக்கால் போடாமல் கட்டிடம்

புதிய முறையில் கட்டப்படுகிறது

போபால், அக் 12—

'ஒரு கலெக்டர் மாளிகையும் ஓர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடமும் ஒரு மாணவர் விடுதிக் கட்டடமும், ஒரு அங்குல ஆழத்திற்குக் கூட கடைக்கால் போடாமலேயே ரெய்சின் என்ற பகுதியில் போபால் பொது மராமத்து இலாகாவினரால் வெற்றிகரமாக கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அங்குள்ள கருப்புப் பருத்தி நிலத்தில கட்டிடம் கட்டுவதற்கு அதிகச் செலவாகும் என்று, மத்திய அரசாங்கம் அமைக்க இருந்த மின்சாரக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலையை வேறு இடத்தில் அமைத்தார்களாம். சாதாரணமாக இந்த நிலத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் மழைக்குப் பிறகு வெடிப்பு விட்டு, உறுதியை இழந்துவிடும் என்று கூறப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் 25 அடிக்குக் குறையாமல் கடைக்கால் வேறு போட வேண்டியிருந்ததாம்.

ஆனால், தற்போது கண்டுபிடித்துள்ள புதிய முறைப்படி நிலத்திற்கு 18 அங்குலம் உயரத்திற்கு சிவப்பு மணல் கற்களைப் பரப்பி, நீர் தெளித்து, நீராவி உருளைகளால் கெட்டிப்படுத்தி, கட்டிடம் கட்டவேண்டிய பரப்புக்குக் கான்கிரீட் போட்டுக் கட்டிடம் எழுப்பினால் உறுதியாக இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் புதிய முறை செலவையும் குறைத்து விடுவதாகவும், கட்டிடங்களில் வெடிப்பு ஏற்படாமல் உறுதியாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டர்லிங் இருப்பு

திட்டமிட்டு வேண்டுமென்றே கரைக்கப்பட்டு வருகிறதாம்

சென்னை, அக் 11—

"ஸ்டர்லிங் இருப்புகளை இந்தியா வேகமாகக் கரைத்துக் கொண்டேபோவது குறித்து கவலைப்படத் தேவையில்லை; திட்டமிட்டபடிதான் வேண்டுமென்றே அந்த இருப்புக்கள் கரைக்கப்படுகின்றன"

என்று, மத்திய நிதி அமைச்சர் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

மக்களிடம் பிரமாதப்படுத்தப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்து உலக பாங்கி என்ன கருதுகிறது என்று கேட்கப்பட்டபோது, திட்டவட்டமான பதில் அளிக்க முடியாமல் அவர் உலக பாங்கி கைவிடும் போக்கில் போகாது என்று நான் விரும்புகிறேன்," என்று கூறினாராம்.

இலங்கையின் மருத்துவத் தொழில் வரலாற்றில் செய்யாத முடிவாம்!

கொழும்பு, அக் 11—

ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்று இலங்கையில் உள்ள அரசாங்க மருத்துவர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நவம்பர் 15-ந் தேதிக்குள் தங்கள் கோரிக்கையை அரசாங்கம் அங்கீகரிக்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்துள்ளனராம்.

இலங்கையின் மருத்துவத் தொழில் வரலாற்றிலேயே இதுவரை மருத்துவர்கள் செய்யாத முடிவாகும் இது!

பிச்சை எடுத்தும் இனிப் பிழைக்க முடியாது!

சென்னை, அக். 11—

வயிற்றுப் பிழைப்புக்காக வேறு வழியின்றி, பாட்டுப் பாடி பிச்சை எடுத்துப் பிழைக்கும் பிச்சைக்காரர்கள், இனி ஓடும் இரயிலில் பாடமுடியாதபடி தீவிர நடவடிக்கை எடுப்பதற்குத் தென்பகுதி இரயில்வே ஈடுபட்டுள்ளது.

ஓடும் இரயில்களில், 'டேப் ரிக்கார்டு,' ஒலி பெருக்கிகள் ஆகியவை மூலம், இரயில்களில் பிச்சைக்காரர்களுக்குக் காசு போட்டு ஊக்கம் தராமலிருக்குமாறும், அவர்கள் டிக்கெட்டின்றிப் பிரயாணம் செய்வதைத் தடுக்குமாறும் வேண்டுகோள் விடப்படுமாம்.

ரூ. 18 கோடி செலவில்!

இந்தியாவில் சாய உற்பத்தி

புதுடில்லி, அக். 12—

சாய உற்பத்திக்கான ஆதாரப் பொருள்கள் தேசியக் கைத்தொழில் முன்னேற்ற நிலையத்தில் உற்பத்தி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்தியாவிற்குத் தேவையான வகைகளைத் தயாரிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் விருப்பமாம்.

இதற்கு ரூ. 18 கோடி செலவாகும் என்று கருதப்படுகிறது.

தேர்தல் நிதி

தோழர் ஆர். தங்கப்பன் (பொய்யாண்டார்கோட்டை, ஒரத்தநாடு தாலுகா, தஞ்சை மாவட்டம்) அவர்களிடமிருந்து தேர்தல் நிதிக்காக ரூ 31 வரப்பெற்றோம்—தலைமை நிலையம்.

• • •

திருத்தம்

5—10—56 'நம் நாடு' இதழில் (சென்னை) 3-ம் பக்கத்தில், தேர்தல் நிதிக்காகச் சேலம் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் வசூலிக்கப்பட்ட ரூ 27-12-0 என்றிருப்பதை, '26-9-56ல் தருமபுரியில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தேர்தல் நிதிக்கென உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்ட ரூ. 27-12-0' என்று திருத்தி வாசித்துக் கொள்ளக் கோருகிறோம்.

பிறப்பு

தி. மு. கழகப் பொதுக்குழு உறுப்பினர் நடிகர் டி. வி. நாராயணசாமி அவர்களின் துணைவியார் பாப்பம்மாள், 28-9-56ல் ஒரு ஆண் மகவிற்குத் தாயுமானார்; தாயும் சேயும் நலம்.

இஸ்ரேல்—ஜோர்டான் மோதுதல்

ஐ. நா. பார்வையாளர் குழு அறிக்கை

ஜெருசலம், அக். 11—கடந்த நான் இரவு இஸ்ரேல்-ஜோர்டான் எல்லையில், யூதர்களும் அராபியர்களும் சண்டையிட்டுக்கொண்ட சம்பவம் குறித்து, ஐ நா. பார்வையாளர்கள் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள்.

இஸ்ரேல் இராணுவத்தினர் தான் ஜோர்டான் போலீஸ் நிலையம் ஒன்றைத் தாக்கினர் என்றும், ஜோர்டான் இராணுவ முகாம் ஒன்றும் இஸ்ரேல் இராணுவத்தினரால் தாக்கப்பட்டது என்றும் அவர்களது அறிக்கை கூறுகிறது.

இஸ்ரேல் தாக்குதலுக்கு எதிராக ஜோர்டானும் பின்னர் தாக்குதலைத் துவக்கியதாகவும், உள்ளூர் நேரப்படி இரவு சுமார் 9-30 மணிக்குத் துவங்கிய இந்தச் சண்டை காலை 4-20 மணி வரை நீடித்ததாயும், எல்லையில் உள்ள ஐ. நா. போர் நிறுத்த பார்வையாளர்கள் இருதரப்பாரையும் சண்டையை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்ததாயும் கூறப்படுகிறது.

சண்டைகளின்போது 48 ஜோர்டானியர்கள் கொல்லப்பட்டனர் என்றும், ஜோர்டான் எல்லையில் கிடைத்த இரு இஸ்ரேல் இராணுவத்தினரின் பிணங்கள் இஸ்ரேல் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றும் அறிக்கை கூறுகிறது.

ஐ நா. பார்வையாளர் குழுவில் உள்ள ஜோர்டான் பிரதிநிதிகள் ஒரு அவசரக் கூட்டம் கூட்டுமாறு கோரியதாகவும், அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள இஸ்ரேல் பிரதிநிதிகள் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் ஆய்வுக் குழு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தேர்தல் ஆய்வுக் குழுவினர் தங்கியிருந்த விடுதிக்கு வெளியே ஏராளமான மக்கள் ஆவலோடு திரண்டிருந்தனர்.

காஞ்சி நகர அரசியல் வட்டாரத்தில் தேர்தல் ஆய்வுக் குழுவின் வருகை பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

தேர்தல் ஆய்வுக் குழுவின் முன் விவரம் கூறிய அத்தனைத் தோழர்களும் தங்களின் கடமையை ஒழுங்குற நிறைவேற்றி, தேர்தல் ஆய்வுக் குழுவின் பணியை நிறைவுபெறச் செய்தனர்.

மாலை 4 மணிக்கு மாவட்டச் செயலாளர் சம்பந்தம் உள்ளிட்ட அனைவருக்கும், பிரதிநிதிகளுக்கும் ஆய்வுக் குழுவின் சார்பில் பொதுச் செயலாளர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

★

வேலூரில் ஆய்வுக்குழுவின் பணி

12-10-56 மாலை 7-மணிக்குத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் வேலூர் நகர மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர். வழிநெடுக கழகத் தோழர்களால் ஆய்வுக் குழுவினருக்கு மலர் மாலைகள் அணிவித்து உற்சாகமூட்டினர்.

வேலூர் நகர மண்டபத்தில் தேர்தல் ஆய்வுக்குழுவினரை வ. ஆ. மாவட்டச் செயலாளர் முல்லை சத்தி, துணைச்செயலாளர் கருத்தோவியன், நகரச் செயலாளர் பாலகிருஷ்ணன், தோழர்கள் ப. உ. சண்முகம் மா. பா. சாரதி ஆகியோர் வரவேற்றனர்.

ஏறத் தாழ 200 பிரதிநிதிகள் மண்டபத்திற்குள் வீற்றிருந்தனர். மண்டபத்திற்கு வெளியேயும் ஏராளமான மக்கள் கூடியிருந்தனர்.

மண்டபத்திற்குள் பொதுச் செயலாளர் உள்ளிட்ட ஆய்வுக்குழு உறுப்பினர்கள் நுழைந்ததும் பிரதிநிதிகளும், தோழர்களும் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

பின்னர், பொதுச்செயலாளர் ஆய்வுக்குழுவினர் மேற்கொண்டுள்ள பணியையும், அதற்கேற்பப் பிரதிநிதிகள் தரவேண்டிய விளக்கங்களைப் பற்றியும் எடுத்துக்கூறினார்.

அடுத்து ஆய்வுக் குழுவினரான இரா. நெடுஞ்செழியன், சம்பத், நடராசன், மதியழகன் ஆகிய நால்வரும் பிரத்தியேக இடத்தில் வீற்றிருந்து தொகுதி வாரியாக விளக்கம் கேட்டனர். மாவட்டச் செயலாளர் அதற்கான துணைபுரிந்து வந்தார். இரவு 10 மணி வரை 9 தொகுதிகளைப் பற்றிய சூழ்நிலைக்கான விவரங்களை பிரதிநிதிகள் வாயிலாகத் தேர்தல் குழுவினர் பதிவு செய்து கொண்டனர்.

வேலூரிலும் கழகத் தோழர்கள், தேர்தல் குழுவினர் கேட்ட எல்லாவற்றிற்கும் தக்க விபரங்களைக் கூறி தங்களின் கடமை உணர்ச்சியைக் காட்டினர்.

வேலூர் நகரில், தேர்தல் ஆய்வுக் குழுவின் வருகை, காங்கிரஸ் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருப்பதாகத் தெரிய வருகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தின் மற்ற 3 தொகுதிகளைக் குறித்து 13—10—56 அன்று திருப்பத்தூரில் தேர்தல் ஆய்வுக் குழுவினர் விவரம் பெறுவர்.

உலக அணு நிறுவனம்

செஞ்சினாவுக்கு இடம்?

நியூயார்க், அக் 12—உலக அணுசக்தி நிறுவனம் ஒன்றை அமைக்கவேண்டும் என்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த 82 நாடுகள் மாநாடு ஒன்றில் கூடி விவாதித்துக் கொண்டிருக்கின்றன அல்லவா?

அப்படி நிறுவ உத்தேசிக்கப்படும் நிறுவனத்தில் செஞ்சினாவுக்கு இடம் தரவேண்டும் என்று ரஷ்யப் பிரதிநிதி கோரினார்.

அது குறித்து வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற அவரது கோரிக்கை தோல்வியுற்றது.

திருச்சி மாவட்டத்தில்

திராவிட முன்னேற்றக் கழகத்

தேர்தல் ஆய்வுக் குழு

“திருச்சி மாவட்டத்தில் கீழ்க்கண்ட விவரப்படி தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும்:—

“கரூர், அரவக்குறிச்சி, குளித்தலை, பஞ்சப்பட்டி தொகுதிகளுக்கு 16—10—56 காலை 9 மணிக்கு—கரூர் வழிப்போக்கர் விடுதியிலும் (Travellers' Bungalow);

“முசிறி, பெரம்பலூர், அரியலூர், ஜெயங்கொண்டம், டி. பழூர், லால்குடி, சீரங்கம், திருச்சிராப்பள்ளி I & II; அந்தநல்லூர், மணப்பாறை, ஆலங்குடி, திருமயம் தொகுதிகளுக்கு 16—10—56 மாலை 4மணிக்கு—திருச்சிமுனிசிபல் சத்திரத்திலும் நடைபெறும்.

“கிளைக்கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழக ஆர்வங்கொண்ட பிரமுகர்களும் தவறாது வந்திருந்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.”

—என்று திருச்சி மாவட்ட தி. மு கழகச் செயலாளர் அ பெ தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

புரட்சிப் பாசறைத் திறப்பு விழா

14-10-56 காலை 9 மணிக்கு வேலூர்-சைதாப்பேட்டை பழைய முன்சீப் கோர்ட்டு தெரு (சந்தில்) 1/2 எண்ணுள்ள கட்டிடத்தில் மேற்படி பாசறைத் திறப்புவிழா நடைபெறும்; தோழர் வி. எ. இளஞ்செழியன் தலைமை வகிப்பார். தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமி திறந்து வைப்பார். தோழர் வி. எஸ். பாண்டியன் பேசுவார்.

பிரச்சாரக் கூட்டம்

14—10—56 மாலை 6 மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், அண்ணாபிள்ளைத் தெருவில், தோழர் எஸ் கோபால் தலைமையில் கழகப் பிரச்சாரக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. முத்து, ப. அ. சம்பத், ப. ஆசைமுத்து, வ பா. சின்னையா, எ. எஸ். ஆனந்தன் ஆகியோர் பேசுவர்.

கண்டமானடியில் அண்ணா

நிகழ்ச்சிகள்

★

15—10—56 காலை 10-மணியளவில் விழுப்புரம் வட்டம் கண்டமானடியில் தோழர் எஸ். விநாயகம்—தோழியர் கமலம்மாள் திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. கோவிந்தசாமி M.L.A., மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

மாலை 4-மணிக்கு, அண்ணா அவர்கள் கே. வி. கே. சாமி மன்றத்தைத் திறந்து வைப்பார்.

* * *

மாலை 6-மணிக்கு, தோழர் ஏ. கோவிந்தசாமி M. L. A. தலைமையில் கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை— இராயபுரம்:
புதுமனை குப்பம் மாணவர் பள்ளி எதிர்ப்புறம்
14-10-56 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: என். சீவரத்தினம்
பேசுவோர்:
கண்ணதாசன்
எம். நாராயணசாமி

★

வேப்பஞ்சேரி:
16—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: கு. செல்லப்பெருமாள்
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு, சி. ஐம்பு

நாகை வட்டக்குழு உறுப்பினர்கட்கு:

14—10—56 மாலை 4-மணிக்கு, நாகை தி மு. கழகக் கட்டிடத்தில், நாகை வட்டக்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

பாரதி விழாவில் அண்ணா

16-10-56 காலை 9-மணிக்கு, சென்னை — வண்ணை தியாகராயர் கல்லூரித் தமிழ்மாணவர் மன்றத்தில் பாரதி விழா, பேராசிரியர் ம. கி. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அண்ணா அவர்கள் பேசுவார்.

தமிழ் நாடு மருத்துவத் தொண்டர்களுக்கு:

“இம்மாதம் 23, 24-ந் தேதிகளில் நடக்க இருக்கும் தமிழ் நாடு மருத்துவர் மாநாட்டிற்குத் தொண்டர் படையில் சேர விரும்பும் மருத்துவத் தொண்டர்கள், ‘எண் 76, ஜி. ஏ ரோடு, பழைய வண்ணையம் பதி, சென்னை-21’ என்ற முகவரிக்கு வந்து சேருமாறு கேட்டுக் கொள்கிறேன்,” என்று மேற்படி மருத்துவர் மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவர் சி கோவிந்தசாமி அறிவிக்கிறார்.

சொற்பயிற்சிக் கூட்ட ஆரம்ப விழா

14—10—56 காலை 10 மணியளவில், திரு வி. சுந்தரமூர்த்தி செட்டியார் பள்ளியில், திரு. கே சந்திரசேகரன் அவர்கள் தலைமையில், வட சென்னை பொழுதுபோக்கு சங்க இலக்கிய கலாசாரக் கிளையின் சார்பில் சொற்பயிற்சிக் கூட்ட ஆரம்ப விழா நடைபெறும். தோழர் க. அறிவழகன், ‘குறள் நெறி’ எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

15—10—56 இரவு 8½மணிக்கு, வரகனேரி தி. மு கழகப் பணிமனையில் தோழர் வி. கே. எம். சாமி தலைமையில் நடைபெறும்.

* * *

14—10—56 காலை 10மணிக்கு, கோவை 29-வது வட்டம் அழகிரி நினைவுப் படிப்பகத்தில், ‘நீதி’ எனும் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

14—10—56 காலை 10 மணியளவில் சென்னை 31-வது வட்டம் புதுப்பேட்டை அழகிரி நினைவு மன்றப் பணிமனையில், ‘இன்பத் திராவிடம் ஏன் வேண்டும்?’ என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

பாராட்டுக் கூட்டம்

சென்னை 18-வது வட்டத் தோழர் ஆர். கிருட்டிணமூர்த்தி அவர்களது திருமணத்தையொட்டி, 14—10—56 மாலை 4 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

திருமணங்கள்

15-10-56 காலை 8 மணிக்கு சென்னை—வண்ணை சிமிட்ரி ரோட் மாடல் லைன், 3-வது வீதி எண் 137 இல்லத்தில் தோழர் டி எஸ். ஏலையா—தோழியர் ஆர். எஸ். சுசிலாதேவி திருமணம் தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். சீவரத்தினம், கே. எம். கண்ணபிரான், சி. ஆர். பாலசுந்தரம், முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

15—10—56 மாலை 6-மணிக்கு மேல், சென்னை—அயோத்தி நகரில், தோழர் என். சீவரத்தினம் தலைமையில், தோழர் இரா. கோவலன் — தோழியர் இராசம்மாள் வாழ்க்கை ஒப்பந்தவிழா நடைபெறும்.

★★

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்.	ஊர்	நேரம்		தங்கும் இடங்கள்
14:	சேலம்	.... காலை 9	,,	.... சித்தேசுவரா சினிமா தியேட்டர்
,,	ஈரோடு	.... மாலை 6	,,	.... கரூர் ரோட், வெங்கட நாய்க்கர் சத்திரம்
15:	கோயமுத்தூர்	.... காலை 9	,,	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி (Travellers' Bungalow)
,,	உடுமலைப்பேட்டை	.... மாலை 6	,,	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி
16:	கரூர்	.... காலை 9	,,	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி
,,	திருச்சி	.... மாலை 6	,,	.... முனிசிபல் சத்திரம்
17:	திண்டுக்கல்	.... காலை 9	,,	
,,	பெரியகுளம்	.... மாலை 6	,,	.... இராமையா இல்லம்
18:	மதுரை	.... காலை 9	,,	
,,	விருதுநகர்	.... மாலை 6	,,	.... முசாபரி பங்களா
19:	திருநெல்வேலி	.... காலை 9	,,	.... பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடி (கிரைம் பிராஞ்சு போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
,,	நாகர்கோவில்	.... மாலை 6	,,	.... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
20:	திருவனந்தபுரம்	.... காலை 9	,,	....; தி.மு.க., ஆண்டாள் பில்டிங்ஸ், தம்பானூர்
21:	காரைக்குடி	.... மாலை 6	,,	.... ‘இயூமன் காட்டேஜ்’—Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
22:	பட்டுக்கோட்டை	.... காலை 9	,,	.... காசாங்குளம் வடகரை சத்திரம் ஒய்வுவிடுதி
,,	தஞ்சை	பிற்பகல் 3	,,	.... கீழவாசல். கோண்டிராசபாளையத் தண்ணீர்ப் பந்தல் கட்டிடம்
,,	மாயவரம்	.... மாலை 6	,,	.... முனிசிபல் ஒய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
23:	கடலூர் N. T.	.... காலை 9	,,	.... முசாபரி பங்களா

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

‘அறிவகம்’ சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.